'012/DD/24

T·C-036

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## TRANSLATION TEST – SECOND PAPER – TRANSLATION OF NEWS PAPER REPORT IN TAMIL TO ENGLISH

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க.

(4 × 25 = 100)

1. Translate the following into English.

மருத்துவ படிப்புகளில் சேர நடத்தப்பட்ட நீட் நுழைவுத் தேர்வு முடிவுகள் சமீபத்தில் வெளியிடப்பட்டன. அதில், 67 மாணவர்கள், முழு மதிப்பெண்ணான 720 க்கு மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். அது தொடர்பாக, தேர்வு எழுதிய மாணவர்கள் பலர் சந்தேகத்தை எழுப்பி உள்ளனர். மேலும், அரியானா மாநிலத்தில், ஒரே தேர்வு மையத்தில் எழுதிய 6 மாணவர்கள் அந்த 67 மாணவர்களுள் அடங்குவர் என்பதும் அவர்களது சந்தேகத்தை மேலும் அதிகரித்துள்ளது. எனவே, நீட் தேர்வு முடிவுகளில் முறைகேடு நடந்திருப்பதாக லட்சக்கணக்கான மாணவர்கள் சமூக வலைத்தளங்களில் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.

ஆனால் என்.சி.இ.ஆர்.டி. பாட நூல்களில் செய்யப்பட்ட மாற்றம், நேர விரயம் ஆகியவற்றுக்காக, கருணை மதிப்பெண் அளிக்கப்பட்டதால்தான் பல மாணவர்களுக்கு மதிப்பெண் அதிகரித்ததாக, தேசிய தேர்வு முகமை விளக்கம் அளித்துள்ளது. எந்த முறைகேடும் நடக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது. நீட் தேர்வு முடிவுகளுக்குக் காங்கிரசு கட்சியும் கண்டனம் தெரிவித்துள்ளது.

2. Translate the following into English.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்ற சீர்மிகு சட்டப்பள்ளி மற்றும் சட்டக் கல்லூரிகளில் 5 ஆண்டு ஒருங்கிணைந்த சட்டப் படிப்புக்கான, 2024–25 ஆம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவு கடந்த மாதம் 10 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி முடிய நடைபெற்றது.

[Turn over

சீர்மிகு சட்டப்பள்ளிகளில் 5 ஆண்டு ஒருங்கிணைந்த சட்டப் படிப்பில், 624 இடங்கள் உள்ளன. இதற்கு, 7 ஆயிரத்து 42 விண்ணப்பங்கள் வந்துள்ளன. பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் சட்டக் கல்லூரிகளில் 2 ஆயிரத்து 43 இடங்கள் உள்ளன. இதற்கு 16 ஆயிரத்து 984 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

இந்த நிலையில், 5 ஆண்டு ஒருங்கிணைந்த சட்டப் படிப்பிற்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான தரவரிசை பட்டியலை, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் நேற்று வெளியிட்டது. மாணவர்கள் தங்கள் தரவரிசை மற்றும் கட் ஆப் மதிப்பெண் விவரங்களை *www. tndalu.ac. in.* என்ற இணைய தளத்தில் அறியலாம்.

3. Translate the following into English.

நாடு முழுவதும் அதிகளவு மழை பொழிவை வழங்கும் தென்மேற்கு பருவமழை, கேரளாவில் கடந்த மாதம் 30ஆம் தேதி தொடங்கியது. தென்மேற்கு பருவமழை தொடங்கியது முதல் கேரளா மற்றும் தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளை ஒட்டிய மாவட்டங்களில் பரவலாக மழை பொழிந்து வருகிறது. தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், வட தமிழகத்தின் ஓரிரு இடங்களில் லேசான மழை பொழிந்து வருகிறது.

நேற்று காலை, 8.30 மணியுடன் நிறைவு பெற்ற 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக புதுக்கோட்டையில் 9 செ. மீட்டர் மழை பதிவானது. நீலகிரி மாவட்டம் பந்தலூரில் 8 செ. மீட்டர் மழையும், புதுக்கோட்டை மாவட்டம் பெருங்களூர், தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை ஆகிய பகுதிகளில் தலா 7 செ. மீட்டர் மழையும் பதிவானது. தற்போது, தென்னிந்திய பகுதிகளில், மேல் வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் வருகிற 12-ஆம் தேதி வரை இடி, மின்னலுடன் கூடிய லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதே போல், இன்று (வெள்ளிக்கிழமை), கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப் பகுதிகளிலும், நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. சென்னையைப் பொறுத்தவரையில், அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில், இடி, மின்னலுடன் கூடிய லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது.

4. Translate the following into English.

அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் 400–க்கும் அதிகமான என்ஜினீயரிங் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்தக் கல்லூரிகளில், பி.இ., பி.டெக்., உள்பட தொழில்நுட்பப் படிப்புகளில் 2 லட்சத்துக்கும் அதிகமான இடங்கள் உள்ளன. இதற்கான, 2024–25 ஆம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கை ஆன்லைன் விண்ணப்பப் பதிவு கடந்த மாதம் 6 ஆம் தேதி தொடங்கியது. விண்ணப்பப் பதிவின் முதல் நாளில், 20 ஆயிரத்து 97 மாணவர்கள் விண்ணப்பித்தார்கள். இந்த நிலையில், என்ஜினீயரிங் படிப்புக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நேற்றுடன் நிறைவு பெற்றது. 2 லட்சத்து 48 ஆயிரத்து 848 விண்ணப்பங்கள் குவிந்துள்ளன. அதில், 2 லட்சத்து 4 ஆயிரத்து 439 மாணவர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தி உள்ளார்கள். அவர்களுள், ஒரு லட்சத்து 76 ஆயிரத்து 145 மாணவர்கள் அசல் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்துள்ளனர்.

கடந்த ஆண்டு 2 லட்சத்து 29 ஆயிரத்து 175 விண்ணப்பங்கள் என்ஜினீயரிங் படிப்புக்குக் குவிந்தன. அதில், ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 847 மாணவர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தினர். கடந்த ஆண்டை காட்டிலும், 19 ஆயிரத்து 673 விண்ணப்பங்கள் அதிகம் பதிவாகி உள்ளன. என்ஜினீயரிங் படிப்புக்கு விண்ணப்பித்தவர்கள் அசல் சான்றிதழ்களைப், பதிவேற்றம் செய்ய வருகிற 12 ஆம் தேதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. பதிவு கட்டணம் செலுத்திய மாணவர்களுக்கான சமவாய்ப்பு, எண்கள் வருகிற 12 ஆம் தேதி வெளியிடப்படுகிறது. சான்றிதழ் சரிபார்ப்பு வருகிற 13ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரையில் நடைபெறும் என்று தொழில்நுட்ப கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது. மாணவர் கலந்தாய்வு மற்றும் சேர்க்கைக்கான, தேதி ஓரிரு நாட்களில் வெளியாகும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.